## Entrance song

திருகுலமே எழுந்திடுக

அருட்பொழியும் பலியினிலே

ஒருங்கிணைவோம் கரம் குவிப்போம்

உன்னதரைப் போற்றுவோம் – 2

ஆஹா சந்தோஷம் பெருகிடுதே

அவர் சந்நிதி காண்கையிலே – 2

ஆனந்தமுடனே அவர் திருமுன்னே

கூடிடுவோம் கூடிடுவோம்

ஆண்டவரே நம் கடவுள் என்று

பாடிடுவோம் பாடிடுவோம் - 2

அவரே நம்மைப் படைத்தார்

அவருக்கே சொந்தம் நாம் – அவர்

படைப்புகள் நாம் அவர் பிள்ளைகள் நாம் – அவர்

மந்தையின் ஆடுகள் நாம் .........

இன்னிசை முழங்க இறைவன் வாசல்

நுழைந்திடுவோம் நுழைந்திடுவோம்

பன்னிசையோடு அவரது பீடம்

சூழ்ந்திடுவோம் சூழ்ந்திடுவோம் – 2

அவரை புகழ்ந்திடுவோம்

அவர் பெயர் வாழ்த்திடுவோம் – அவர்

நல்லவராம் அவர் வல்லவராம் – அவர்

அன்பே நமை நடத்தும் .......

## **Response song**

எந்தன் ஆன்மா ஆண்டவரை  ஏற்றி போற்றிடுதே – 2

இந்த அடிமை என்னை அவர் நினைந்ததனால்

அந்த மீட்பனில் நெஞ்சம் மகிழ்கின்றதே .......

எந்தன் ஆன்மா ஆண்டவரை  ஏற்றி போற்றிடுதே

வல்லவர் எனக்காய் பெரியன புரிந்தார்

வையகம் எனைதினம் வாழ்ந்திடுமே

அருள் நிறைந்த மரியே வாழ்க ஆண்டவர் உம்முடனே

பெண்களுக்குள்ளே பெரும் பேருபெற்றீர்

வாழ்க மரியே வாழ்க (வல்லவர்........)

அவர் தம் பதம் பணிவோர் தலைமுறைக் கெல்லாம்

தயவருள்வார் அவர் தூயவராம் – 2

அவர் தமதாற்றல் கரத்தினை நீட்டி

செருக்கடைந்தோரை சிதறடித்தார் – 2 அவர்

வலியோரை உயர் இருக்கையின்றிறக்கி

எளியோரை மிக உயர்த்திவிட்டார்

பசித்தோரை பல நலன் கொண்டு நிறைத்து

செல்வரை  வெறுங்கையரென விடுத்தார்

**Offertory song**

தந்திட்ட பொருட்கள் யாவையும் எடுத்து

தந்தோம்  தந்தாய் ஏற்றிடுவாய் – 2

வழங்கிட கனியோ உணவோ இன்றி

வாடிடும் வறியோர் பலர் இறைவா – (2) வெறும்

விழிநீர் வியர்வை வேதனை அன்றி

வேறெதும் இல்லா நிலை இறைவா

உனக்கென என்னை வழங்கிடும் வேளை

உன்னருள் இவர்க்காய் கேட்கின்றேன் – (2) எங்கள்

மனம்பொருள் ஆற்றல் அனைத்தையும் இவர்தம்

மனத்துயர் நீங்க படைக்கின்றோம்

## Communion song

என்னில் ஒன்றாக எந்தன் நல் தேவன்

எழுந்து வருகின்றார்

எண்ணில்லா அருளை அன்புடனே

தலைவன் தருகின்றார் - 2

உதயம் காண விழையுமோர் மலரைப் போலவே

இதயம் இறைவன் வரவையே நிதமும் தேடுமே – 2

பகலை மறைக்கும் முகிலாய் பல பழிகள் சூழ்ந்ததே – அந்த

முகிலும் இருளும் குறையும் தீர முழுமைத் தோன்றுமே

என்னில் இணையும் கிளைகளோ வாழ்வைத் தாங்குமே

என்னைப் பிரியும் உள்ளத்தை நாளும் தேடுவேன் – 2

என்று பகர்ந்த இறைவா எம்மை இணைக்க வாருமே – உந்தன்

அன்பு விருந்தை நாளும் அருந்தி அமைதி காணுவேன்

**Thanksgiving song**

ஆயிரம் துதிப்பாடல் எந்தன் நாவினில் அசைந்தாடும்

ஆனந்தம் ஆனந்தம் என் மனதில் ஆண்டவா உனைப்பாட

ஆண்டவா உனைப்பாட (2) ஆனந்தம் (2)

என் மனதில் ஆண்டவா உனைப்பாட

வான்முகிலும் உயர்மலையும் உந்தன் புகழ்பாட ஆ …ஆ

தேன் பொழியும் நறுமலர்கள் உன் பெயர் சுவைபாட – 2

வான்பொழியும் நீர்த்துளிகள் – உந்தன் அருள்பாட

யான் உனது திருப் புகழை கவியால் நிதம் பாட

ஆண்டவா உனைப்பாட (2) ஆனந்தம் (2)

என் மனதில் ஆண்டவா உனைப்பாட

பகல் ஒளியும் பால் நிலவும் ஒளியாம் உனைப் பாட ஆ …ஆ

அலைகடலும் அதன் சிறப்பும் கருணையின் விதம் பாட – 2

மழலைகளின் தேன் மொழிகள் தூய்மையின் திறம்பாட

யான் உனது திருப்புகழை கவியால் நிதம் பாட

ஆண்டவா உனைப்பாட (2) ஆனந்தம் (2)

என் மனதில் ஆண்டவா உனைப்பாட

**Final song**

ஞானம் நிறை கன்னிகையே

நாதனைத் தாங்கிய  ஆலயமே

ஞானம் நிறை கன்னிகையே

மாண்புயர் ஏழு தூண்களுமாய் – 2

பலிபீடமுமாய் அலங்கரித்தாயே

பாவ நிழலே அணுகா

பாதுகாத்தார் உனையே பரமன்

பாவ நிழலே அணுகா

தாயுதிரம் நீ தரித்திடவே – 2

தனதோர் அமல தலமெனக் கொண்டாய்

வாழ்வோர் அனைவரின் தாயே

வானுலகை அடையும் வழியே

வாழ்வோர் அனைவரின் தாயே

வாஞ்சையோடணைக்கும் தாரகையே – 2

வாடிய மனிதர் கதியெனக் கொண்டோம்